# தோழர் வாலாசா வல்லவன் கேள்விகளுக்கு 50 மாதங்களாக பதில் சொல்லாத பெ.மணியரசன்

50 Questions Unanswered by Maniarasan

வாலாசா வல்லவன் VALASA VALLAVAN



தோழர் வாலாசா வல்லவன்

முகநூலில் மார்ச் 2016இல்

எழுப்பிய கேள்விகளுக்கு

# 50 மாதங்களாக பதில் சொல்லாத

# ~~தோழர்~~ (தமிழ்த் தேசியப் பேரியக்க)

# அய்யா பெ. மணியரசன்

@நிமிர்வோம்

தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் பொதுச் செயலாளர் ~~தோழர்~~ அய்யா பெ.மணியரசன் அவர்களுக்கு சில கேள்விகள் என்று முகநூல் வாயிலாக 14 மார்ச் 2016 அன்று ஆரம்பித்து தொடர்ச்சியாக தோழர் வாலாசா வல்லவன் அவர்கள் எழுப்பிய கேள்விகள் இதுவரை பதிலளிக்கபடாமல் கடந்து செல்லும் பெ. மணியரசன் அவர்களின் பார்வைக்காக தொகுத்து உள்ளோம்.

## உள்ளடக்கம்


நீங்கள் உண்மைமையிலேயே அயோத்திய தாசர் சிந்தனைகளை படித்தீர்களா?

மறைமலையடிகள் வாழ்க்கை வரலாறு, மற்றும் அவருடைய நூல்களையும் படித்து விட்டுதான் எழுதுகிறீர்களா?

சமயம் என்று வரும் போது அவர் சமஸ்கிருதத்தை முழுமையாக எதிர்க்க வில்லை மறைமலையடிகள்

சைவம் என்று கருதுகையில் மறைமலையடிகள் தன்னைப் பாரதரில் ஒருவனாகக் கண்டு மகிழ்ந்தவர்

மறைமலையடிகள் இந்து, இந்தியர் என்பதில் ஆர்.எஸ்.எஸ்.காரர்

மறைமலையடிகள் தனித்தமிழ் நாடு கேட்டாரா?

அறிவுரைக் கொத்து

முற்போக்கு தீர்மானங்களும் தமிழ்ப் பல்கலைக்கழகமும்

இந்தி எதிர்ப்பு மாநாடு

கி.ஆ.பெ.விசுவநாதன்??

திராவிடர் கழகம் பெயர் மாற்றம்

திராவிடர் கழகப் பெயர் மாற்றத் தீர்மானம் 2

கி.ஆ.பெ.விசுவநாதன் தான் உண்மையாக தனித்தமிழ் நாடு கேட்டாரா?

தமிழ் நாடு தனியாக பிரிந்தால் பாக்கிஸ்தானுக்கு வந்த கதிதான் வரும் - மபொசி

திருக்குறள் மாநாடு

வடவர் எதிர்ப்பு

எல்லைப் போராட்டம்

ஆந்திர பிரிவினை

திராவிடர்கள் இயக்கங்கள் தமிழ்த் தேசியத்திற்கு தடை கல்லா? படிக்கல்லா?

சிலப்பதிகாரம், தொல்காப்பியம் – பாவேந்தர் பார்வை

தமிழரசர்கள் முட்டாள்கள்; காட்டு மிராண்டிகள் என்று பெரியார் சொல்லலாமா? – பாவேந்தர் பதிலடி

தமிழுக்கு இலக்கியம் இல்லை எனலாமா?

செங்கோலில் ஈ.வெ.ரா.வின் அறிவியக்கம் கட்டுரை

இடஒதுக்கீடு


சட்டத்திருத்தம்

## நீங்கள் உண்மைமையிலேயே அயோத்திய தாசர் சிந்தனைகளை படித்தீர்களா?

14 மார்ச் 2016

அவர் மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரிக்கு எழுதிய கடிதத்தில் சாதி பேதமற்ற பூர்வீக திராவிடர்கள் என்று பதிவு செய்யுங்கள் என்று எழுதி உள்ளார்.
ஆனால் நீங்கள் தமிழர் என்று பதிவு செய்யும்படி கடிதம் எழுதினார் என்று சுப.வீ.யுடன் விவாதம் செய்த போது தெரிவித்து இருந்தீர்கள். நான் யூ டியூப்பில் கேட்டு விட்டு சுப.வீ.யுடன் தொடர்பு கொண்டு மணியரசன் சொல்லுவது தவறு. அயோத்திய தாசர் அப்படி எழுதவில்லை என்று சொன்னேன். அவரும் அயோத்திய தாசர் சிந்தனைகளை எடுத்து படித்து விட்டு வல்லவன் சொல்லியது சரியாக உள்ளது என்று அயோத்திய தாசர் சிந்தனைகள் தொகுதி ஒன்று பக்கம் 307, 308இல் திராவிடர் என்று குறிக்கும்படி கடிதம் எழுதினார் என்பதை சுப.வீ. அடுத்த நாளே தன்னுடைய வலைப் பூவில் பதிவு செய்து உள்ளார்.

இன்று வரை அப்பதிவு அப்படியே உள்ளது. மேலும் அயோத்தியதாசர் தமிழர்களை குறிக்க அவருடைய சிந்தனைகளில் பல நூற்றுக்கணக்கான இடங்களில் திராவிடர் என்றே குறித்து உள்ளார் என்பதை மறைத்து நீங்கள் இன்று வரை பொய்யாகவே பேசியும் எழுதியும் வருவது ஏன்?. ஒரு பொய்யை திரும்ப திரும்ப சொன்னால் உண்மை ஆகிவிடும் என்று கருதியே இதை செய்கிறீர்களா?


வருகின்றார்கள். இவ்விருதிரத்தோர்களில் ஐரோப்பியர்களே பெருந்தொ
யுள்ளவர்களாயிருந்து தேசத்தின் சகல காரியாதிகளையும் நடத்துவார்களாயி
சகல குடிகளும் சமரச சுகம்பெற்று விருத்தியடைவார்கள். தற்கால சுதேசிகள்
அதிகரிப்பார்களாயின் பூர்வ சுதேசிகள் பாழடைவதுடன் தேசமும்
சீரழிந்துபோமென்பது திண்ணம் திண்ணமேயாம்.


175. பூர்வ திராவிட பௌத்தர்களும் சென்னை சென்செஸ் கமிஷனரும்

- 4:27; டிசம்பர் 14, 1910 -

தற்காலம் எடுக்கும்படி ஆயத்தஞ்செய்யுங் குடிமதிப்பின் ஆலோசினையில் தொதுவர், குரும்பர், கோத்தர், மகமதியர், கிறீஸ்தவர், பாரசீகர், சீக்கர் இவர்களை வெவ்வேறாகப் பிரித்துக் கணக்கெடுப்பது போல் இந்துக்கள், இந்துக்களல்லாதவர்களாயிருப்போரையும வேறாகப் பிரிப்பதாயின் ஏழைக்குடிகள் சகலரும் சுகமுற்று சீரடைவார்கள்.

இந்துக்களின் சாதி ஆசாரங்களுக்கு உட்படாதவர்களும், அவர்களால் தீண்டப்படாதவர்களென்று விலக்கியுள்ளவர்களும், சகல சுதந்திரங்களுக்கும்

அயோத்திய தாசர் சிந்தனைகள் முதல் தொகுதி பக்கம் எண் 308 சாதி பேதமற்ற திராவிடர்கள் என குறிப்பது உத்தமம் ஆகும்.



## மறைமலையடிகள் வாழ்க்கை வரலாறு, மற்றும் அவருடைய நூல்களையும் படித்து விட்டுதான் எழுதுகிறீர்களா?

தோழர் பெ.மணியரசன் அவர்களுக்கு இரண்டாவது கேள்வி. தாங்கள் மறைமலையடிகள் அவர்களைத்தான் தமிழ்த் தேசியத்தின் முன்னோடி என்று பேசியும், எழுதியும் வருகின்றீர்கள் உண்மையிலேயே நீங்கள் மறைமலையடிகள் வாழ்க்கை வரலாறு, மற்றும் அவருடைய நூல்களையும் படித்து விட்டுதான் எழுதுகிறீர்களா?

மறைமலையடிகள் 1916 இல் தனித்தமிழ் இயக்கம் தொடங்கப் பட்டதாக எழுதுகிறீர்கள். ஆனால் அவருடைய பெயரன் நம்பி ஆருரன் தன்னுடைய முனைவர் பட்ட ஆய்வேட்டில் தமிழ் மறுமலர்ச்சியும் திராவிட தேசியமும் என்கிற நூலில் அடிகளைப் பற்றி பல செய்திகளை கூறியுள்ளார்.

மறைமலையடிகளின் மகன் மறை. திருநாவுக்கரசு எழுதிய மறைமலையடிகளின் வாழ்க்கை வரலாறு இந்த இரண்டு நூல்களையும் படித்தாலே மறைமலையடிகள் தமிழ்த் தேசியத்தின் முன்னோடி அல்ல என்று தெரிந்து கொள்ளலாம். இப்போஹு சொல்லுங்கள் ! மறைமலை அடிகள் தமொழ்த் தேசியத்தின் முன்னோடியா?

## சமயம் என்று வரும் போது அவர் சமஸ்கிருதத்தை முழுமையாக எதிர்க்க வில்லை மறைமலையடிகள்

மறைமலையடிகள் தமிழ் மொழியில் சமஸ்கிருதம் கலந்து இருந்ததை 1920முதல் நீக்கி வரலானார். ஆனால் சமயம் என்று வரும் போது அவர் சமஸ்கிருதத்தை முழுமையாக எதிர்க்க வில்லை என்பதை அவருடைய மகன் மறை திருநாவுக்கரசு எழுதிய மறைமலையடிகளின் வாழ்க்கை வரலாற்றில் பதிவு செய்து உள்ளார்.

நம் அடிகள், சிறப்பு வகையில் சைவ சமயத் துறவி,பொது வகையில் இந்து சமயி என்று தன்னை பெருமையுடன் கூறிக்கொள்பவர்.

திருக்கோயில்கள், தெய்வத் திருவுருவச் சிலைகள், சமய அடையாளங்கள், கோவில் விழாக்கள், திருநாட்கள், அறிவுக்கொத்த சமயச் சடங்குகள், இந்து சமயத்தின் பொதுக்கருத்துகளான மறுபிறப்பு, இருவினை, கொல்லாமை, மோட்சம், நரகம் இவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர். கோயில்களில் வழிபாடு செய்வோர் ஆதிசைவ பார்ப்பனரல்லாதவராதலின், அவர்களை அப்பணியில் இருந்து நீக்கல் வேண்டாம் என்ற கருத்துடையவர். கோயில் சடங்குகளும், வழிபாடுகளும் தமிழில் நடக்க வேண்டும் என்பவர்.ஆனால் வடமொழியில் நடத்துவோரைத் தடுத்தல் கூடாது எனக் கருதுபவர். இந்து சமயம் என்ற பொதுபான்மையில் வடமொழியும் மறுக்கற்பாலதன்று என்னும் எண்ணம் உடையவர். இந்தியா, இந்தியர், இந்துக்கள் என்ற ஒருமைப்பாட்டில், சிவபெருமானைப் போற்றுகின்றதென்ற மதிப்பில் வடமொழியையும் ஏற்றுக்கொண்டவர். (மறைமலையடிகள் வாழ்க்கை வரலாறு பக்கம் 545 )

மறைமலையடிகளின் மகன் மறை. திருநாவுக்கரசு எழுதியது. மணியரசன் அவர்களே பெரியாரைப் பகைவர் பட்டியலில் சேர்த்து விட்டு மறைமலையடிகளை தலைவராக கொண்டு அமைக்கப்படும் உங்கள் தமிழ்த் தேசியம் என்ன இலக்கோடு, எங்கே போகிறது? எங்கே போகிறது?

## சைவம் என்று கருதுகையில் மறைமலையடிகள் தன்னைப் பாரதரில் ஒருவனாகக் கண்டு மகிழ்ந்தவர்

மறைமலையடிகளைக் கொச்சைப் படுத்த வேண்டும் என்பதற்காக நான் அவர்களைப் பற்றி எழுதவில்லை. தமிழ்த் தேசியத்திற்கு அவர் எந்த அளவிற்கு பயன்படுவார் என்பதே என் கேள்வி. நம் சமயங்கட்கும், நாட்டுக்கும் பொதுப் பெயராக இந்து மதம், இந்துசுதானம், இந்தியா முதலிய பெயர்கள் பன்னூறு ஆண்டுகளாக உலகில் வழங்கி வருகின்றன. அதனால், இப்பெயர்களை உண்மையில் சமய நம்பிக்கை,நாட்டுப்பற்று உள்ளவர்கள் மறுக்க மாட்டார்கள், இகழமாட்டார்கள். ஆதலால், அடிகளும் இப்பொதுப் பெயர்களை பெருமையோடு குறிப்பிடுவார்கள். பொதுமை கருதித் தன்னைப் பெருமையுடன் இந்து, சைவன் என்று சொல்லிக் கொள்வார்கள்.

அன்றியும், அடிகள், சைவ சமயத்தை தமிழ் நாட்டுக்குள் மட்டும் முடக்கி விடவில்லை. காசுமீரம் முதல் குமரி வரையில், சோமநாதபுரம் முதல் காளிகட்டம் வரை அதன் அகலம் அகன்று விளங்குவதைப் போற்றுபவர். பல்வேறு மொழி, பல்வேறு நடையுடை பாவனைகள் கொண்ட பாரத மக்களுக்குச் சிவமே, விசுணுவே மெய்ப் பொருளாய்க் கடவுளாய் விளங்கும் காட்சி கண்டு உள்ளங் குளிரும் உயர்ந்தோராவர். சைவம் என்று கருதுகையில் அவர் தன்னைப் பாரதரில் ஒருவனாகக் கண்டு மகிழ்வார். இந்துக்களிடம் வேறுபட்ட பழக்க வழக்கங்களின் ஊடேயும் ஒற்றுமைப் பண்பாடு உலவும் அரிய கருத்துகள், செயல்கள் கண்டின்புறுவார் அடிகள். (மறைமலையடிகள் வாழ்க்கை வரலாறு மறை திருநாவுக்கரசு எழுதியது பக்கம் 546,547)

இந்திய தேசியத்தை எதிர்த்த பெரியார் உங்களுக்கு பகைவர். ஆனால் இந்திய தேசியத்தில் கரைந்து போன மறைமலையடிகள் உங்களுக்கு தலைவர்.எங்கே போகிறது உங்கள் தமிழ்த் தேசியம் ? நான் முன்வைத்துள்ளனை சரியா? தவறா?

# மறைமலையடிகள் இந்து, இந்தியர் என்பதில் ஆர்.எஸ்.எஸ்.காரர்

18.3.2016

மறைமலையடிகள் இந்து, இந்தியர் என்பதில் ஆர்.எஸ்.எஸ்.காரர் போலவே சிந்தனை செய்துள்ளார் என்பதை அவருடைய மகன் மறை திருநாவுக்கரசு எழுதிய மறைமலையடிகளின் வாழ்க்கை வரலாற்றில் அறியமுடிகிறது. இந்து சமயம், இந்துக்கள் என்ற எண்ணம், உணர்ச்சி இல்லாவிடில் இந்தியாவையும், சைவம், வைணவம், சைனம், புத்தம் முதலிய சமயங்களையும், அவற்றின் உயர்ந்த நூல்களையும், கலைகளையும், பழக்க வழக்கங்களையும், சிறப்பாகக் கோயில்களையும், தத்துவக்கலை வடிவங்களான திருவுருவங்களையும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முசுலீம்கள் அழித்து ஒழித்துத் தரைமட்ட மாக்கியிருப்பர். இந்து சமய உணர்வே, இந்துக்கள் என்ற ஒருமையே நம் தமிழ் நாட்டை, பாரதத்தை, சைவத்தை, வைணவத்தை இன்றளவும் காத்து வருகின்றது. இவ்வுண்மையை உணர்ந்து இவ்வுணர்ச்சிகளைக் காத்துவரல் வேண்டும் என்று அடிகள் உணர்ச்சியுடன் கூறுவார். தமிழ், சைவம், தமிழ் நாடு என்பனவற்றின் தனி உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டே இவற்றிற்கு இடையூறு இல்லாமல் இந்து சமயத்தையும், இந்திய நாட்டையும் தளராது பாதுகாத்தல் வேண்டும் என்றும் அடிகள் ஆர்வந் ததும்பக் கூறுவதுண்டு.

தமிழ் நாட்டிலோ - கேரளத்திலோ, ராசபுதனத்திலோ, பீகாரிலோ இந்துக்களுக்கும், இந்து சமயங்கட்கும் பிற சமயத்தவரால் - நாட்டவரால் தாக்குதல் நேரின் அது போழ்து இந்துக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நம் இந்துக்களையும், சமயத்தையும் பாதுகாப்பர். ஆதலின், இந்துக்கள், இந்துசமயி, இந்திய நாடு என்ற உணர்ச்சிகள் இந்துக்கள் அனைவருக்கும் இன்றியமையாதன என்று அடிகள் உணர்ச்சி மிக உரைப்பதுண்டு.

வடவரின் அரசியல் செருக்கிற்கு நாம் தமிழ் மக்கள் இடந்தரலாகாது. அவர் மொழியை இந்தி திணித்தற்கும் நாம் சிறிதும் இடம் தரலாகாது. ஆயினும், தமிழ் மக்களாகிய நாம் வட நாடு முழுவதும் யாத்திரை புரியவும், அவர்களால் போற்றப் போற்றப்படவும் விரும்பப்படவும் காரணமாய் இருப்பது நாம் இந்துக்களாய் இருப்பதனாலேயாம். ஆதலால், இந்த வாய்ப்புகளை நாம் பெற்று இன்புறவும், பாரதம் முழுவதும் பரவியுள்ள ஒரு பெருஞ் சமயத்தின் உறுப்பினர் என்று மாண்புறவும் நாம் இந்துக்கள் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம் என்பதும் அடிகள் கருத்தே என்று மறைமலையடிகள் வாழ்க்கை வரலாற்றில் மறை திருநாவுக்கரசு எழுதியுள்ளார். (பக்கம் 547-548) பெரியாரைத் தமிழ் இனத்தின் பகைவர் என்று கூறும் பெ.மணியரசன் மறைமலையடிகளைப் பற்றி என்றாவது ஆய்வு செய்து எழுதியது உண்டா?.

மறைமலையடிகளை தலைவராகக் கொண்ட உங்கள் தமிழ்த் தேசியம் எங்கே போகிறது?.எதை இலக்காகக் கொண்டு பயணிக்கிறது?

## மறைமலையடிகள் தனித்தமிழ் நாடு கேட்டாரா?

19-3-2016

மறைமலையடிகள்தான் முதன் முதலில் தனித்தமிழ் நாடு கேட்டார் அதற்கு பிறகு தான் பெரியார் தனித்தமிழ் நாடு கேட்டார் என்று பெரும்பாலான தமிழ் தேசியர்கள் கூறிவருகிறார்கள். அது உண்மையா?. பெரியார் 1930களிலேயே இந்தியா ஒரு நேசனா? என்ற கேள்வியை எழுப்பினர். 1-6-1930 குடி அரசு ஏட்டில் இச்செய்தி பதிவாகியுள்ளது. இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது நடைபெற்ற தமிழர் எழுச்சி பயணத்தின் இறுதி நாளில் 11-9-1938 கடற்கரை கூட்டத்தில் தலைவராக இருந்த மறைமலையடிகள் முதலில் பேசினார். அடுத்து நாவலர் சோமசுந்தர பாரதியார் பேசினார். அடுத்து இறுதியில் பெரியார் பேசினார். அன்று மூவரும் தனித்தமிழ் நாடு முழக்கமிட்டனர். பெரியார் இறுதியில் பேசினார் என்பதற்காக அவர்களைப் பார்த்து காப்பி அடித்தார் என்று கூறுவதா? இந்த நடைபயணத்தை ஏற்படுத்தியவர்கள் முழுமையாக சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் ஒரு சிலர் கலந்து கொண்டனர். இந்த ஊர்வலம் தொடங்கப்படுவதற்கு முன்பே ஆகஸ்டு மாதம் திருச்சியில் நீதிக்கட்சி தலைவர்களில் ஒருவரான தி.பொ.வேதாசலம் தலைமையில் தமிழ்த் தேச விடுதலைச் சங்கம் தொடங்கப்பட்டது. (நம்பி ஆருரன் தமிழ் மறுமலர்ச்சியும் திராவிடத் தேசியமும்.பக்கம் 395. )

இந்த ஊர்வலத்தின் முழக்கமும் ஒன்றரை லட்சம் மக்கள் கூட்டமும் இத்தலைவர்களை அப்படி முழங்கச் செய்தது. ஆனால் பெரியார் அப்படியல்ல

அதற்கு முன்பும் பின்பும் தொடர்ச்சியாக முழக்கமிட்டார். மறைமலையடிகள் நாட்டு பிரிவினையை வலியுறுத்தியதில்லை என அவருடைய மகன் மறை திருநாவுக்கரசு எழுதிய மறைமலையடிகளின் வாழ்க்கை வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மறைமலையடிகள் தம் இறுதி காலம் வரையில் - தாம் எழுதிய நூல்கள் அனைத்திலும் நம் இந்திய நாடு, நம் இந்திய மக்கள், நம் இந்து மக்கள் என்றே எழுதியுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேரவையில் 16-9-43 இல் பேருரை ஆற்றிய போது கூட்டத்தில் அடிகளை ஓர் அன்பர் எழுத்தின் வழியாக திராவிட நாடு பற்றி தங்கள் கருத்து யாது? என ஒரு கேள்வி கேட்டார். அதற்கு அடிகள் விடை அளிக்கையில் இந்தியா முழுவதுமே திராவிட நாடு தான் என்று கூறினார்...

இந்திய ஒருமைப்பாட்டை அவர் தம் பேச்சிலோ - எழுத்திலோ என்றும் எங்கும் எதிர்த்ததில்லை. (மறை திருநாவுக்கரசு பக்கம் 687 )

சும்மா ஒரு நாள் பேசியவரைத் தலைவர் என்கிறார். தனித்தமிழ் நாடு தான் தன்னுடைய இலட்சியம் என்று இறுதி வரை உறுதியாக இருந்த பெரியாரை தமிழ் இனத்தின் பகைவர் என்று நீங்கள் கூறுவது சரியா? தவறா?

## அறிவுரைக் கொத்து

20-3-2016

மறைமலையடிகள் 1916இல் தனித்தமிழ் இயக்கத்தை ஒரு அமைப்பாக தொடங்கவில்லை என்பது தெரியுமா?.

மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கம் வெற்றியடைய பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் தான் காரணம் என்பது தெரியுமா?

பார்ப்பனரல்லாதார் இயக்கம் தொடங்கப்பட்ட பிறகு படித்த தமிழரிடையே ஏற்பட்ட பொதுவான மனமாற்றம் தான், இதற்குக் காரணம் எனலாம். நம்பி ஆருரன் தமிழ் மறுமலர்ச்சியும் திராவிடத் தேசியமும் என்கிற நூலில் பக்கம் 487, 488இல் பதிவு செய்து உள்ளார்.

கரந்தை தமிழ்ச் சங்கத்தை தோற்றுவித்த உமா மகேஸ்வரன் பிள்ளை நீதிக்கட்சியின் தஞ்சை மாவட்டச் செயலாளர் என்பது தெரியுமா?

நீதிக்கட்சி 1917யிலேயே இந்தியையும், சமஸ்கிருதத்தையும் எதிர்த்தது என்பது தெரியுமா? (நம்பி ஆருரன் பக்கம் 245.)

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1925 வரை சமஸ்கிருதத்தை ஒரு பாடமாக எடுத்து படிக்காமல் தமிழ் வித்துவான் அதாவது புலவர் படிப்பு படிக்க முடியாது என்று இருந்ததை ஒழித்துக் கட்டி தமிழ் மொழிக்கு விடுதலை

வாங்கிக் கொடுதத்து நீதிக்கட்சி ஆட்சி என்பது தெரியுமா? (நம்பி ஆருரன் பக்கம் 167-178.)

அவ்வளவு ஏன் மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தெரிந்து இருக்க வேண்டும் என்று இருந்ததை ஒழித்துக் கட்டி தமிழர்கள் மருத்துவர் ஆக வழி செய்தவர் நீதிக்கட்சியின் முதலமைச்சர் பனகல் அரசர் என்பது தெரியுமா? முகம் மாமணி எழுதிய கி.ஆ.பெ.விசுவநாதன் வாழ்க்கை வரலாறு படித்து தெரிந்து கொள்ளுங்களேன்.

மறைமலையடிகள் 1929 வரை மும்மொழி கல்வித் திட்டத்தை ஆதரித்தார் என்பது தெரியுமா? (நம்பி ஆருரன் பக்கம் 503.)

சுயமரியாதை மரியாதை இயக்கம் 1929 செங்கல்பட்டில் முதல் சுயமரியாதை மாநாட்டில் சமஸ்கிருதத்தை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அதன் பிறகு தான் மறைமலையடிகள் இருமொழிக் கொள்கைக்கு மாறினார் என்பது தெரியுமா?.

மறைமலையடிகள் இந்தியாவின் பொது மொழியாக ஆங்கிலம் தான் இருக்க வேண்டும் என்று கூறி உள்ளார் என்பது தெரியுமா?

மறைமலையடிகள் தன்னுடைய நாட்குறிப்பைக் கூட ஆங்கில மொழியிலேயே எழுதி உள்ளார் என்பது தெரியுமா?

மறைமலையடிகள் தன்னுடைய பெயரை கூட இறுதி வரை மாற்றிக்கொள்ளவில்லை. தாம் பதிப்பித்த அனைத்து நூல்களிலும் வேதாசலம்

என்றே ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டு வந்தது தெரியுமா? (நம்பி ஆருரன் பக்கம் 485.)

மறைமலையடிகள் எழுதிய அறிவுரைக் கொத்து நூலை சென்னைப் பல்கலைக் கழகத்தின் பாடதிட்டத்தில் இருந்து 1935இல் நீக்கம் செய்த போது அதை எதிர்த்து குரல் கொடுத்தவர் பெரியார் (குடி அரசு 11-8-1935)

சுயமரியாதை இயக்கம் எல்லா கிளைகளும் மறைமலையடிகள் நூல் மீண்டும் பல்கலைக் கழகத்தில் இடம் பெற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அத்தீர்மானங்களை குடி அரசு ஏட்டில் பதிவுச் செய்து உள்ளார்.அதன் பிறகு தான் அறிவுரைக் கொத்து நூலை சென்னைப் பல்கலைக் கழகத்தின் பாடதிட்டத்தில் இடம் பெறச் செய்தனர்.....

இந்தப் பெரியார் தமிழின்ழ்த்தின் பகைவரா? நண்பரா?

# முற்போக்கு தீர்மானங்களும் தமிழ்ப் பல்கலைக்கழகமும்

21-3-2016

பெ.மணியரசன் அவர்கள் மறைமலையடிகள் அவர்களின் பல்லாவரம் சைவ சித்தாந்த பொது நிலை கழகத்தில் 1931 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை புகழ்ந்து எழுதி உள்ளார். விதவை மறுமணம், தீண்டாமை ஒழிப்பு உள்ளிட்ட பல தீர்மானங்கள் முற்போக்கானவை என்று பேசியும் எழுதியும் வருகிறார்.

மறைமலையடிகள் 1911இல் இச்சபையை நிறுவினார். பெரியார் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கி 1929 இல் செங்கல்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டில் இதை விட முற்போக்கானவை பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1930 இல் ஈரோட்டில் நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் பல்வேறு முற்போக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதையெல்லாம் மறைத்து விட்டு 1931 இல் மறைமலையடிகள் இயற்றிய தீர்மானங்களை புகழ்ந்து பேசுவதில் என்ன நியாயம் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கத்தினால் தான் மறைமலையடிகள் அப்படி பட்ட தீர்மானங்களை நிறைவேற்றினார்.

1925 இல் நீதிக்கட்சி கட்சி அரசு தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்க முயற்சி செய்தது. பெரியார் அதை வரவேற்று குடி அரசு ஏட்டில் எழுதினார். ஒரு

வேண்டுகோளும் வைத்தார். அதாவது இக்குழுவில் பார்ப்பனர்களை உறுப்பினர்களாக சேர்க்கக் கூடாது என்பது தான் முக்கியம் என்றார்.

ஆனால் மறைமலையடிகள் தமிழ்ப் பல்கலைக்கழகம் தேவையில்லை என்று மெட்ராஸ் மெயில் ஆங்கில ஏட்டில் ஒரு நீண்ட கடிதம் எழுதினார். அக்கடித நகலை நம்பி ஆருரன் தன்னுடைய தமிழ் மறுமலர்ச்சியும் திராவிடத் தேசியமும் என்கிற நூலில் பிற்சேர்க்கையில் இணைத்து உள்ளார். பெரியார் தமிழ் பல்கலைக்கழகம் வேண்டாம் என்று சொல்லி இருந்தால் அவர் தெலுங்கர், கன்னடர் தமிழ் மொழிக்கு ஒரு பல்கலைக்கழகம் வருவதை அதனால் தான் அவர் எதிர்க்கிறார் என்று மணியரசன் போன்றவர்கள் கூறி இருப்பார்கள்.

அது பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக மாறிப் போனது வேறு வரலாறு. அன்றைய அரசு இருபத்தி ஏழு இலட்சம் கட்டடங்கள் கட்ட வழங்கியது. ஆண்டு தோறும் ஒன்றரை லட்சம் மானியம் வழங்கியது. அண்ணாமலை செட்டியார் பணம் இருபது இலட்சம் அரசுப் பணம் அதைவிட அதிகம். தமிழ் மொழிக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் முதன்மை கொடுக்க வலியுறுத்தப்பட்டது. அதனால் தான் அங்கு தமிழ் இசைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. பெரியாரும் திராவிடர் கழகத்தினரும் தமிழ் இசையை ஆதரித்தனர் பார்ப்பனர்கள் தான் தமிழ் இசையை எதிர்த்தனர் என்பதை சான்றுகளோடு நம்பி ஆருரன் தன்னுடைய நூலில் குறிப்பிடுகிறார்.( பக்கம் 421-433)

பெ.மணியரசன் அவர்களே! பார்ப்பனர்களைத் தமிழர் என்கிறீர்கள்?. உங்கள் முடிவு சரியா? தவறா?

# இந்தி எதிர்ப்பு மாநாடு

22-3-2016

மறைமலையடிகளை பெரியார் நட்பு வட்டத்தில் தான் வைத்து இருந்தார். 11-9-1938இல் நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்பு கூட்டத்திற்கு மறைமலையடிகளை தலைமை தாங்க வைத்தார். அந்தக் கூட்டத்தில் பேசிய நாவலர் சோமசுந்தர பாரதியார். ஒன்றரை லட்சம் மக்கள் முன்பு பெரியாருக்கு தான் இழைத்த தொல்லைகளுக்கு மேடையில் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டு கொள்கிறேன் என்று கூறினார். (விடுதலை 17-9-1938.)

அன்று தலைவராக இருந்த மறைமலையடிகள் தம் தலைமை உரையிலேயே தமிழ் தமிழ் என்று சொல்லிக் கொண்டு ஆங்கிலத்தை விட்டு விடாதீர்கள். ஆங்கிலம் தான் நம்மை மனிதன் ஆக்கியது என்று கூறினார். (விடுதலை 17-9-1938

1948 இல் ஓமந்தூராரார் ஆட்சியில் மீண்டும் இந்திப் புகுத்தப்பட்டது. திராவிடர் கழகம் அனைத்தும் அமைப்புகளையும் ஒருங்கிணைத்து மிகப்பெரிய இந்தி எதிர்ப்பு மாநாட்டை 14-8-48 இல் மறைமலையடிகள் தலைமையிலேயே தான் நடத்தியது.

அந்த மாநாட்டில் ம.பொ.சியும் கலந்துகொண்டு உரையாற்றினார். ஆனால் காங்கிரஸ் அமைச்சர் ஒருவர் உணவு இடைவேளை நேரத்தில் ம.பொ.சி.யைக் கண்டித்ததால் பிற்பகல் மாநாட்டிற்கு அவர் வரவில்லை. இது

இந்தி எதிர்ப்பு மாநாடு மட்டுமல்ல காங்கிரஸ் எதிர்ப்பு மாநாடு என்று கூறி ஓடிவிட்டார். அவர் மணியரசன் அவர்களின் இன்னொரு தலைவர்.

நாவலர் சோமசுந்தர பாரதியார் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வில்லை. அவர் காங்கிரஸ் கட்சியில் தீவிரமாக இருந்தவர். அதை வெளிப்படையாக 11-9-1938 இல் நடைபெற்ற கடற்கரை கூட்டத்தில் நான் இன்றும் காங்கிரஸ்காரனே. இந்தி கட்டாயம் என்பதால் எதிர்க்கிறேன் என்று கூறினார். (விடுதலை 17-9-1938.)

1948 இல் நாஅலர் சோமசுந்ஹர பாரதியார் காங்கிரஸ் அமைச்சர் அவினாசிலிங்கம் இந்தி கொண்டு வந்ததை ஆதரித்தார் என்பது மணியரசன் போன்றவர்களுக்கு தெரியுமா? அவர் மணியரசன் அவர்களின் இன்னொரு தலைவர்.

கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள் 1917 முதல் நீதிக்கட்சியில் செயல் பட்டவர். 1938இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது அவர் செயலாளர் பொறுப்பில் இருந்தார். பெரியார், இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது அதைத் தூண்டி விட்டார். இவர் தான் இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு மூலக் காரணம் என்று கூறி, பெரியாருக்கு இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இங்கே சிறையில் அடைக்கப்பட்டால் போராட்டத்தை தூண்டி விடுவார் என்று நினைத்த இராசாசி அவரை பெல்லாரி சிறையில் அடைத்து விட்டார்.

பொப்பிலி அரசரை நீதிக்கட்சி தலைவர் பதவியில் இருந்து விலகும்படி இராசாசியின் மிரட்டலுக்கு பயந்த மற்ற ஜமீன்தார்கள் நெருக்கடி காரணமாக

பொப்பிலி பதவி விலகினார். நீதிக்கட்சிக்கு தலைவர் இல்லாமல் இருந்ததால் கி.ஆ.பெ.விசுவநாதன் அவர்களும் சர் ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களும் பெல்லாரி சிறையில் பெரியாரை சந்தித்து நீதிக்கட்சி தலைவர் பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி சம்மதிக்க வைத்தனர்.

நீதிக்கட்சி மாநாட்டின் தலைமை உரையையும் எழுதி வாங்கி வந்து 29,30,31 டிசம்பர் 1938இல் பெரியாரை கட்சியின் தலைவராக அறிவித்து பெரியாரின் தலைமை உரையை இவர்கள் இருவரும் ஆளுக்குபாதி படித்ததாக கி.ஆ.பெ.விசுவநாதன் எனது நண்பர்கள் என்ற நூலில் கூறியுள்ளார்

# கி.ஆ.பெ.விசுவநாதன்??

23-10-2016

பெரியார் பெல்லாரி சிறையில் இருந்த போது நீதிக்கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். திசம்பர் 29,30,31 மூன்று நாள் மாநாட்டில் கி.ஆ.பெ.விசுவநாதன் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பெரியாரின் தலைமை உரையில் கூட இறுதியில் தமிழ் நாடு தமிழருக்கே என்று தான் முடியும். பெரியார் சிறையில் இருந்து வெளியே வந்த பிறகு சென்னை அடையாறு செட்டி நாட்டு அரண்மனையில் நடைபெற்ற நீதிக்கட்சி நிர்வாகக்குழு கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழர் அல்லாதவர்கள் பெரியார் அவர்களிடம் நீங்கள் தமிழ் நாடு தமிழருக்கே என்றால் நாங்கள் எங்கே போவது என்ற கேள்வியை எழுப்பினர்.அதன் பிறகு தான் நீண்ட ஆலோசனை செய்து திராவிட நாடு திராவிடருக்கே என்ற கொள்கை முடிவு எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. அப்போது மொழி வழி மாநிலம் அமையவில்லை நான்கு மாநிலத்தை சேர்ந்தவர்களும் ஒரே சென்னை மாகாணத்தில் இருந்தனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இது கட்சியின் கூட்டு முடிவு தான். பெரியாரின் தனிப்பட்ட முடிவு அல்ல கி.ஆ.பெ.விசுவநாதன் அவர்கள் தான் அப்போது பொதுச் செயலாளர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.அதன் பிறகு தான் பெரியார் 17-12-1939 குடி அரசு ஏட்டில் திராவிட நாடு திராவிடருக்கே என்று தலையங்கம் எழுதினார்.

இரண்டாவது உலகப் போர் முடிந்த பிறகு 24,25-8-1940இல் திருவாரூரில் நடைபெற்ற இரண்டு நாள் மாநாட்டில் திராவிட நாடு பிரிவினை

கோரிக்கையை ( இன்றைய சென்னை மாகாணம்தான் நாம் கோரும் திராவிடநாடு என்ற விளக்கத்தோடு) தீவிரமாக நடைமுறை படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்காக ஒரு குழுவை அமைத்தது அக் குழுவில் கி.ஆ.பெ.விசுவநாதன் முக்கிய உறுப்பினர் ஆவார். அந்த மாநாட்டில் மீண்டும் பொதுச் செயலாளராக கி.ஆ.பெ.விசுவநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வரும் மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது யாரும் இந்தியர்கள் என்று சொல்லக் கூடாது. திராவிடர்கள் என்றே பதிவு செய்ய வேண்டும் என்றும் உங்கள் மதம் எது என்று கேட்டால் திராவிட சமயம் என்றே பதிவு செய்ய வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தை முன் மொழிந்தவரே அண்ணல் தங்கோ அவர்கள் தான். இன்று கி.ஆ.பெ.விசுவநாதன், அண்ணல் தங்கோ ஆகியோரை புகழ்ந்து பேசும் மணியரசன் பெரியாரை மட்டும் தமிழ் இனத்தின் பகைவர் என்று கூறுவது ஏன்?.

அண்ணல் ஹங்கோவும், கி.ஆ.பெ.யும் ஏன் திராவிடர், திராவிடநாடு என்பதை ஏற்றார்கள்? அவர்கள் செயல்கள் குறித்து உங்கள் கருத்து என்ன?

## திராவிடர் கழகம் பெயர் மாற்றம்

24-3-2016

திராவிடர் கழகம் பெயர் மாற்றம் ஒரே நாளில் முடிவு எடுக்கப்பட்டதா. முனைவர் அருகோ மற்றும் சில தமிழ்த் தேசிய வாதிகள் பல ஆண்டுகளாக இதை கூறி வருகின்றனர். அதாவது 27-8- 1944ல் நடைபெற்ற சேலம் மாநாட்டில் காலையில் கி.ஆ.பெ.விசுவநாதன், அண்ணல் தங்கோ போன்றவர்கள் தமிழர் கழகம் என்று பெயர் வைக்க முன் மொழிந்ததாகவும் மதிய உணவு இடைவேளை நேரத்திற்கு பிறகு பெரியார் அதை மாற்றி திராவிடர் கழகம் என்று பெயர் வைத்தார் என்று திரும்பத் திரும்ப கூறி வருகின்றனர். அது உண்மை இல்லை என்பதை வரலாறு நமக்கு கூறுகிறது. 26-4-43இல் சேலம் தேவாங்கர் பள்ளியில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் குழு கூட்டத்தில் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் என்ற பெயரைத் தென்னிந்தியர் திராவிடர் கழகம் என்று பெயர் திருத்தம் பட வேண்டும் என்றும்,சேலத்தில் நடக்க உள்ள கட்சி மாநாட்டில் இதை உறுதிப்படுத்தி நடைமுறை படுத்த வேண்டும் என்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது. (குடி அரசு 4-12-43 பக்கம் 5 )

19-11-43 அன்று கோவையில் நடைபெற்ற அண்ணாவின் சந்திரோதயம் நாடகத்திற்கு பெரியார் தலைமை தாங்கினார்.

அப்போது வாசித்து அளித்த வரவேற்பு மடலில் கோவை மாவட்ட திராவிடர் கழகத்தாரால் என்று அச்சிட்டு இருந்தனர். (குடி அரசு 18-12-1943 பக்கம் 4.)

சேலம் நகரில் செவ்வாய் பேட்டை திராவிடர் கழகத்தின் முதலாவது ஆண்டு விழா 16-1-44இல் நடைபெற்றது. (குடி அரசு 22-1-44. பக்கம் 6.)

புவனகிரி திராவிடர் கழகம் முதலாவது ஆண்டு விழா 6-2-44 இல் சி.பி.சின்னராசு பின்னர் சி.பி.சிற்றரசு என்று மாற்றிக்கொண்டார்.அவர் தலைமையில் நடைபெற்றது. (குடி அரசு 12-2-44 பக்கம் 5.)

சென்னையில் நீதிக்கட்சியின் சென்னை மாவட்ட மாநாடு 13-2-44 அன்று அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அப்போது இயற்றப்பட்ட தீர்மானங்களில் முதலாவது தீர்மானம் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் என்பதைச் சென்னை மாகாண திராவிடர் கட்சி என்று மாற்று மாறு சேலத்தில் நடைபெறப் போகும் மாநாட்டிற்கு இம் மாநாடு தெரிவித்து கொள்கிறது. (குடி அரசு 26-2-44. பக்கம் 14.)

# திராவிடர் கழகப் பெயர் மாற்றத் தீர்மானம் 2

25-3 2016

திராவிடர் கழகப் பெயர் மாற்றத் தீர்மானம் ஒரே நாளில் எடுக்கப் பட்ட முடிவு அல்ல என்பதை நேற்று பதிவு செய்து இருந்தேன் அதனுடைய தொடர்ச்சி. திருச்சி மாவட்ட நீதிக்கட்சியின் 15வது மாநாட்டில் 20-2-44 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முதலாவது தீர்மானம் கட்சியின் பெயர் மாற்றத் தீர்மானம் ஆகும். அண்மையில் சேலத்தில் நடக்கவிருக்கும் நமது மாகாண மாநாட்டில் நமது கட்சியின் பெயரைத் திராவிடர் கழகம் என்று மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை இம்மாநாடு சிபாரிசு செய்கிறது. (குடி அரசு 18-3-44 பக்கம் 5).

11-3-44 இல் திருச்சி பொன்மலையில் திராவிடர் கழகத் திறப்பு விழாவும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. (குடி அரசு 18-3-44 பக்கம் 10.) 17-4-44 அன்று ஈரோடு சரசுவதிவதி மண்டபத்தில் கோவை மாவட்ட முதலாவது இளைஞர் மாநாடு தோழர் சி.என்.அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும் க.அன்பழகன்,இரா.நெடுஞ்செழியன் உள்ளிட்டோர் கலந்து கொள்வார்கள். அனைவரும் வருக.( குடி அரசு 15-4-44 பக்கம் 5.)

மேற்கண்ட மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று பெயர் மாற்றத் தீர்மானம் ஆகும். அண்மையில் நடக்கவிருக்கும் நீதிக்கட்சியின் மாகாண மாநாட்டில் அக் கட்சியின் பெயரைத் திராவிடர் கழகம் என்று மாற்ற

வேண்டும் என்ற கோரிக்கையை இம்மாநாடு வலியுறுத்துகிறது. (குடி அரசு 23-4-44.)

சேலத்தில் 18,19-6-1944 இல் நடைபெற்ற சேலம் மாவட்ட திராவிடர் இளைஞர் மாநாட்டு தீர்மானங்களில் முதன்மையானது

நீதிக்கட்சியையும்,தன்மதிப்பியக்கத்தையும் ஒன்று படுத்தி திராவிடர் இயக்கம் என்று பெயர் வைக்க வேண்டும் என்பது. (குடி அரசு 8-7-44 பக்கம் 11.)

11-7-1944இல் தஞ்சையில் ஊ.ஆ.பூ.சௌந்தரபாண்டியன் தலைமையில் தஞ்சை மாவட்ட திராவிடர் இளைஞர் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் நீதிக்கட்சியையும்,தன்மதிப்பியக்கத்தையும் ஒன்று படுத்தி திராவிடர் இயக்கம் என்று பெயரிட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திராவிடர்களே சேலத்தில் நடக்கவிருக்கும் மாநாட்டிற்கு செல்லுங்கள் என்ற தலையங்கம் 12-8-44 குடி அரசு ஏட்டில் எழுதினார் பெரியார் அதில் நாம் திராவிடர்,நம் கழகம் திராவிடர் கழகம்,நமக்கு வேண்டியது திராவிட நாடு என்று எழுதினார் பெரியார்.

20-8-1944இல் நடக்கவிருந்த மாநாடு சரியாக ஏற்பாடு செய்யப்படாததால் 27-8-1944க்கு தள்ளிவைக்கப்பட்டது.

சேலம் மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் மாநாட்டிற்கு முதல்நாளே குடி அரசு ஏட்டில் 26-8-1944 பக்கம் 3இல் வெளியிட்டு உள்ளனர்.

தீர்மானம் 1.அ.

இந்த மாநாடானது ஜஸ்டிஸ் கட்சி என்னும் இக்கட்சிக்கு உள்ள தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் என்ற பெயரைத் திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றத் தீர்மானிக்கிறது. மாநாடானது எதிர்பாராமல் ஒரு வாரம் தள்ளிவைக்கப்பட்டதால் தீர்மானம் முன்பே வெளியிட்டு உள்ளனர்.

தமிழர் கழகம் என்ற பெயரை உணவு இடைவேளை நேரத்திற்கு பிறகு திராவிடர் கழகம் என்று பெரியார் மாற்றி விட்டார் என அருகோவின் இருபத்தைந்து ஆண்டுகால பொய் ஆதாரமற்றது.உண்மைக்கு மாறானது.கட்சியின் ஒட்டுமொத்த முடிவை பெரியார் பெயரில் மட்டும் சுமத்துவது நியாயம் அற்றது. இதை நான் 2011இல்எழுதிய பிறகும் மணியரசன் போன்றவர்கள் திரும்பத் திரும்ப அதையே எழுதுவது சரியா? தவறா?

## கி.ஆ.பெ.விசுவநாதன் தான் உண்மையாக தனித்தமிழ் நாடு கேட்டாரா?

27-8-44 இல் நடைபெற்ற மாநாட்டில் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் என்ற பெயரைத் திராவிடர் கழகம் என்று மாற்றியதில் எந்த தவறும் இல்லை ஏனெனில் அப்போது மொழிவழி மாநிலம் பிரிக்கப்படவில்லை. நான்கு மாநிலத்தை சேர்ந்தவர்களும் ஒரே மாகணமாக சென்னை மாகாணம் என்ற அரசு கட்டமைப்பு தான் இருந்தது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பெரியார் வேண்டும் என்றே தனக்கு சாதகமாக தீர்மானம் கொண்டு வந்தார் என்று சொல்லி வருவதில் எந்த உண்மையும் இல்லை.

கி.ஆ.பெ. விசுவநாதன், மற்றும் அண்ணல் தங்கோ போன்றவர்கள் தமிழர் கழகம் என்று பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டு வந்தார்கள் பெரியார் அதை ஏற்றுக் கொள்ள வில்லை என்று கூறிவரும் தமிழ்த் தேசியம் பேசும் தோழர்களின் கூற்று உண்மையல்ல.

கி.ஆ.பெ.விசுவநாதன் அவர்களைப் பற்றி எம்.பி.ஃல் ஆய்வு செய்த வ.மணிமேகலை அவர்களுக்கு கி.ஆ.பெ.விசுவநாதன் அளித்த பேட்டியில் தாம் சேலம் மாநாட்டில் தமிழ் நாடு நீதிக்கட்சி என்று பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டு வந்ததாக கூறியுள்ளார். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் வ.மணிமேகலை பக்கம் 48. அண்ணல் தங்கோ போன்றவர்கள் அன்று மேடையில் ஏறவே இல்லை. அன்றைய மாநாட்டில் திராவிடர் கழகம் என்ற பெயரை வேண்டாமென்று எதிர்ப்பு தெரிவித்தவர்கள் பழைய தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் என்ற பெயரே இருக்க வேண்டும் என்று தான் கூறினர். பெரியாரிடம் கோபித்துக் கொண்டு வெளியேறிய சர் பி.டி.ராஜன்,

பி.பாலசுப்ரமணியம் போன்றவர்கள் நங்கள் தான் உண்மையான ஜஸ்டிஸ் கட்சி என்று சொல்லிக்கொண்டு போட்டிக் கூட்டத்தைக் கூட்டினர். கி.ஆ.பெ. விசுவநாதன், அண்ணல் தங்கோ போன்றவர்கள் அந்தப் போட்டி நீதிக்கட்சியில் தான் இருந்தனர்.

கி.ஆ.பெ.விசுவநாதன் 1947 இல் தான் தமிழர் கழகம் என்ற பெயரில் அமைப்பை தொடங்கினார். நாவலர் சோமசுந்தர பாரதியார் அதற்கு தலைவர் கி.ஆ.பெ.விசுவநாதன் பொதுச் செயலாளர்.

தமிழர் நாடு என்ற இதழையும் நடத்தினார். மூன்று ஆண்டுகளில் கடைவிரித்தேன் கொள்வார் இல்லை என்றுக் கூறி தன்னுடைய அரசியல் வாழ்க்கையை முடித்துக் கொண்டார். அவர் 1917 முதல் நீதிக்கட்சியில் இருந்தவர். பெரியார் 1926இல் சுயமரியாதை இயக்கம் தொடங்கியது முதல் அவருடன் நெருக்கமாக இருந்திருக்கிறார். 1938 முதல் 1942 வரை நீதிக்கட்சியில் பொதுச் செயலாளராக இருந்தவர். 1938 இல் பெல்லாரி சிறையில் இருந்த பெரியாரை சந்தித்து நீதிக்கட்சி தலைவர் பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி சம்மதிக்க வைத்தவர். அப்போதெல்லாம் பெரியார் கன்னடராக தெரியவில்லை. தனி இயக்கத்தை தொடங்கி பிறகு பெரியாரை கன்னடர் என்று எழுதுவதில் என்ன நியாயம் இருக்கிறது. அதுமட்டுமல்ல அவர் இறுதி காலத்தில் 1980களில் மும்மொழி திட்டத்தை ஆதரித்து எல்லா நாளேடுகளில் அறிக்கை வெளியிட்டார்.இதை கண்டித்து கலி.பூங்குன்றன் விடுதலை இதழில் எழுதினார். (ஆதாரம்: முகம் மாமணி எழுதிய கி.ஆ.பெ. விசுவநாதன் வாழ்க்கை வரலாறு.)

அதுமட்டுமல்ல எம்.ஜி.ஆர். ஆட்சிகாலத்தில் தன்னுடைய சோழிய வேளாளர் சாதிக்கு தனி இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று கூறி சாதி ஊர்வலம் நடத்தினார். அண்மையில் கி.ஆ.பெ.விசுவநாதன் அவர்களின் தமிழர் இதழ் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் பேசிய பெ.மணியரசன் கி.ஆ.பெ.விசுவநாதன் தான் உண்மையாக தனித்தமிழ் நாடு கேட்டார். பெரியார் சும்மா ஒப்புக்காக தனி நாடு கேட்டார் என்று பேசியுள்ளார். மணியரசன் வெளியிட்ட அந்த நூலில் 1300 பக்கங்களில் தனி நாடு பற்றி அய்ந்து பக்கத்திற்கு மேல் இல்லை.

ஏராளமான பெட்டிச் செய்திகள் உள்ளன. ஒரே ஒரு பெட்டிச் செய்தியில் கூட தமிழ் நாடு தமிழருக்கே என்று நடைபெற்ற கூட்டம் பற்றியோ, மாநாடு பற்றியோ ஒரு பெட்டிச் செய்தியில் கூட இல்லையே. இதுதான் அவர் உண்மையாக தமிழ் நாடு கேட்ட இலட்சணமா? அன்றாடம் விடுதலை இதழில் தமிழ் நாடு தமிழருக்கே என்று தலைப்பிட்டு எழுதினார் பெரியார் இவர் சும்மா ஒப்புக்காகக் கேட்டாராம்; ஒன்றுமே எழுதாமல் இருந்தவர் உண்மையாகக் கேட்டாராம். மணியரசன் அவர்களே! உங்கள் மதிப்பீடு சரியா?

## தமிழ் நாடு தனியாக பிரிந்தால் பாக்கிஸ்தானுக்கு வந்த கதிதான் வரும் - **மபொசி**

பெ.மணியரசன் அவர்களின் இன்னொரு தலைவர் ம.பொ.சி.

சுப.வீரபாண்டியன் அவர்கள் பெரியாரின் இடது சாரி தமிழ்த் தேசியம் என்ற நூலை வெளியிட்ட போது மணியரசன், இராசேந்திரசோழன் ஆகியோர் ம.பொ.சி.யை சுப.வீ. எப்படி வலது சாரி தமிழ்த் தேசியர் என்று சொல்லலாம் என்றனர். நான் சொல்கிறேன் ம.பொ.சி.வலது சாரி தமிழ்த் தேசியர் அல்ல; அவர் இந்திய தேசியரே ஆவார். ம.பொ.சி யைப் பற்றி நான் எழுதிய மா.பொ சி.யும் ஆதித்தனாரும் தமிழ்த் தேசியத் தலைவர்களா? என்ற நூலைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்களேன். மேலும் தமிழக எல்லைப் போராட்டம் நடந்த போது அவர் இராசாசியின் கட்டளைகளை ஏற்று கொண்ட பிறகு எல்லைப் போராட்டத்தை திசைத் திருப்பியதை என்னுடைய பெரியார் தமிழ் இனத்தின் பகைவரா என்ற தலைப்பில் கீற்று இணைய தளத்தில் ஏழு கட்டுரைகள் எழுதி உள்ளேன் அதைப் படித்து தெரிந்து கொள்ளுங்களேன்.

உண்மையான தமிழ்த் தேசிய வாதிகளாக இருந்தால் ம.பொ.சி.யை ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் நாடு தனியாக பிரிந்தால் பாக்கிஸ்தானுக்கு வந்த கதிதான் வரும் என்று எழுதினார். தமிழகப் பள்ளிகளில் இந்தி மொழியை கட்டாயப் பாடம் நடத்த வேண்டும் என்று பல முறை செங்கோல் ஏட்டில் எழுதினார். தமிழகப் பள்ளிகளில் சமஸ்கிருதத்தை விருப்பப் பாடமாக வைக்கவும் வலியுறுத்தினார்.

பெரியாரை ஆயிரம் கேள்விகள் கேட்கும் தமிழ்த் தேசியம் பேசும் தோழர்களே! என்றாவது ஒருநாள் நீங்கள் ம.பொ.சி.யை ஒரு கேள்வியாவது கேட்டது உண்டா?.

மணியரசன் அவர்களே ம.பொ.சி தமிழ்த் தேசிய சோசலிச குடி அரசு பேசியது எப்போது தெரியுமா?. 1946 இல் அப்போது அவர் காங்கிரஸ் கட்சியில் இருந்து வந்தார்.காங்கிரஸ் கட்சியில் இருந்து கொண்டே சுதந்திரா தமிழ் நாட்டை வாங்க முடியுமா?. நீங்கள் வெளியிட்ட தமிழர் நாடு இதழ் தொகுப்பு நூலில் பக்கம் 151 இல் செங்கோல் முதல் இதழ் 1950 இல் வெளிவந்த போது கி.ஆ.பெ.விசுவநாதன் என்ன எழுதினார் என்பதை படீத்தீர்களா?.செங்கோல் என்ற இதழ் தமிழ் நாட்டிற்குத் தேவையில்லை என்று தான் எழுதி உள்ளார். அந்த அளவுக்கு இந்திய தேசியத்தையும் காங்கிரஸ் கட்சியையும் ம.பொ.சி ஆதரித்து எழுதினார் என்பது தான் காரணம்.

எம்.ஜி.ஆர். ம.பொ.சி. அவர்களிடம் தம்பி பிரபாகரன் அவர்களை பார்க்கிறீர்களா நான் ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார். அதற்கு ம.பொ.சி.அவர் பயங்கரவாதி அவரை நான் பார்க்க விரும்ப வில்லை என்று கூறிவிட்டார். (ம.பொ.சி எழுதிய ஈழத் தமிழர்களும் நானும் பக்கம் 190.)

உங்களுக்கு பிரபாகரன் தலைவர்; சரி, பிரபாகரனை பயங்கரவாதி என்று சொல்லிய ம.பொ.சி.யுமா தலைவர்?. ம.பொ.சி.காலம் முழுவதும் பெரியாரைத் திட்டிக் கொண்டு இருந்தார்; இப்போது நீங்களும் பெரியார் தமிழ் இனத்தின் பகைவர் என்று சொல்லி வருவதால் ம.பொ.சி. உங்களுக்கு தலைவர் ஆகிவிட்டாரா?

## திருக்குறள் மாநாடு

பெரியாரைத் தமிழ் இனத்தின் பகைவர் தமிழ் மொழியின் பகைவர் என்று பெ.ம.தொடர்ந்து கூறிவருகிறார்

குடி அரசு ஏட்டில் 1927 முதல் சாமி.சிதம்பரனார் திருக்குறளுக்கு உரை எழுதினார். க.நமச்சிவாய முதலியார் தலைமையில் நடைபெற்ற தமிழர் திருநாள் விழாவில் கலந்து கொண்டு ஆண்டு தோறும் இதை கொண்டாட வேண்டும் என்று சொன்னவர் பெரியார்.

1938 இல் இராசாசியின் ஆட்சியில் புகுத்தப் பட்ட கட்டாய இந்தியை எதிர்த்து நின்று போராடியதில் இவர் தான் மையப் புள்ளி.

அவ்வப்போது திருக்குறளைப் பாராட்டி பேசினார்.

தமிழர்களுக்கு பகவத்கீதை தேவையில்லை திருக்குறள் தான் தேவை என்று முழங்கியவர்.

1948 இல் இரண்டாவது இந்தி எதிர்ப்பு போராட்டத்தினை முன் நின்று நடத்தியவர்.

1948,1949குடி அரசு ஏட்டில் சி.இலக்குவனார் அவர்கள் கோடை விடுமுறை நாட்களில் ஒரு மாதம் சங்க இலக்கியச் சொற்பொழிவுகள் நடத்த உள்ளார் திராவிடர் கழகத்தினர் இவரை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று அறிக்கை விட்டிருக்கிறார்.அப்போது சி.இலக்குவனார் திராவிடர் கழகத்தின் தலைமைக் கழகத்தின் சிறப்பு பேச்சாளராக வலம் வந்தார்.

1948,49 குடி அரசு ஏட்டில் புலவர் குழந்தை தொல்காப்பியம் பொருள் அதிகாரத்திற்கு தொடர்ந்து உரை எழுதினார்.

15,16 - 1949 இல் இரண்டு நாள் திருக்குறள் மாநாட்டை பெரியார் நடத்தினார்.
அம்மாநாட்டில் தமிழ் அறிஞர்கள் பலரையும் கலந்து கொள்ளச் செய்தார். நாவலர் சோமசுந்தர பாரதியார், திரு.வி.க.,திருக்குறள் முனுசாமி, தி.பொ.மீனாட்சி சுந்தரனார், பேராசிரியர் சி.இலக்குவனார், முத்தையா முதலியார், ஏ.சக்கரவர்த்தி நயினார், பன்மொழி புலவர் கா.அப்பாதுரையார், புலவர் குழந்தை, கலைவாணர் என்.எஸ்.கே., அறிஞர் அண்ணா, நடிகர் டி.கே.சண்முகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பெரியார் அம்மாநாட்டில் சிறப்புரை ஆற்றினார்.

இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு தான் அப்போது கல்வி அமைச்சராக இருந்த அவினாசிலிங்கம் செட்டியார் அரசுப் பள்ளிகளில் ஆறாவது வகுப்பு முதல் பதினோறாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு திருக்குறளை கட்டாயம் படிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

புலவர் மத்தியில் மட்டுமே இருந்த திருக்குறளை பாமர மக்கள் மத்தியில் கொண்டு போய் சேர்த்தவர் பெரியார்.

1951,52,53 ஆண்டுகளில் ஆகஸ்டு முதல் நாளில் இரயில் நிலையங்களில் இருந்த இந்தி பெயர் பலகைகளை தார் பூசி இந்திக்கு எதிர்ப்பு தெரிவித்தனர் திராவிடர் கழகத்தினர். ஆனால் உங்கள் தலைவர் ம.பொ.சி.

மண்ணெண்ணெய் டின்னை எடுத்துக் கொண்டு போய் அந்த தாரை அழித்து இந்தி எழுத்துக்களை தெரியும்படி செய்தார். அவரைத் தமிழ்த் தேசியத் தலைவர் என்கிறீர்களே, இது சரியா? தவறா?

## வடவர் எதிர்ப்பு

பெ.ம. அவர்கள் வெளியாரை வெளியேற்ற வேண்டும் என்கிறார். இதற்காக தான் பெரியார் 1950இல் வடநாட்டான் கடைமுன் மறியல் போராட்டம் நடத்தினார். 8-10-50இல் திராவிடர் கழகம் மத்திய நிர்வாகக் குழுவில் முடிவு செய்து சென்னையில் வடநாட்டான் கடைமுன் மறியல் போராட்டம் நடத்தினார். நவம்பர் முதல் தமிழகம் முழுவதும் வடநாட்டான் கடைமுன் மறியல் போராட்டத்தை விரிவு படுத்தினார். அதற்காக பல பொது கூட்டங்களிலும், மாநாடுகளிலும் பேசி வடநாட்டு எதிர்ப்பு உணர்வை உண்டாக்கினார்.

வடநாட்டான் கடைமுன் மறியல் போராட்டம் 151 நாள்கள் நடைபெற்றது. 556 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு தலா ஒரு மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

அப்போது தான் உங்களின் ம.பொ.சி. திராவிடர் இயக்கத்தை அழிப்பது தான் தன்னுடைய முதல் இலட்சியம் என்று சொல்லி ஊர் ஊராக திராவிடர் இயக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்தினார். அவருக்கு பின்னால் காங்கிரஸ் கட்சியினரும், பார்ப்பனர்களும் இருந்து உதவி செய்யததை அவரே’எனது போராட்டம்’ என்ற நூலில் பதிவு செய்து உள்ளார்.

அப்போது ம.பொ.சி. வடநாட்டானோ, பார்ப்பானோ தமிழனைச் சுரண்டல் செய்யவில்லை என்று எழுதினார், பேசினார். அதை கி.ஆ.பெ.விசுவநாதன் வன்மையாக கண்டிக்கிறேன் என்று தமிழர் நாடு இதழில் எழுதினார். அதை நீங்கள் தான் வெளியிட்டு பேசி உள்ளீர்கள் பெ.ம.அவர்களே. தமிழர் நாடு

தொகுப்பு நூலில் பக்கம் 148 இல் ம.பொ.சி. காங்கிரஸ் கட்சியின் மேடையில் நின்று கொண்டு எதிர் கட்சிகளைக் கண்டபடி பேசுவது ஏன்? வடநாட்டான் தமிழனை சுரண்டல் செய்யவில்லை என்று சொல்லுவது ஏன் என்று கண்டித்து உள்ளார். அது மட்டுமல்ல ம.பொ.சி.யால் தமிழருக்கோ, தமிழ் நாட்டிற்கோ எந்த நன்மையும் ஏற்பட போவதில்லை என்று 1950 இலேயே எழுதினார். வடநாட்டான் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி சிறை தண்டனை அடைந்த பெரியாரை தமிழ் இனத்தின் பகைவர் என்று சொல்லி வருகிறீர்கள்.

வடநாட்டானுக்கும், பார்ப்பனர்களுக்கும் ஆதரவாக இருந்த இந்த ம.பொ.சி.யைத் தமிழ்த் தேசியர் என்கிறீர்களா?

## எல்லைப் போராட்டம்

சென்னை மீட்புப் பணியில் திராவிடர் கழகத்தின் பங்களிப்பு என்பது விரிவாக கீற்று இணைய தளத்தில் பெரியார் தமிழ் இனத்தின் பகைவரா என்ற தலைப்பில் ஏழு கட்டுரைகள் எழுதி உள்ளேன்.

தமிழ்த் தேசியம் பேசும் தோழர்கள் பலரும் பெரியார் தெலுங்கர், கன்னடர் ஆகவே மொழிவழி மாநிலம் பிரிந்த போது பெரியார் தமிழ்நாட்டிற்கு ஆதரவாக இல்லை என்றே எழுதியும், பேசியும் வருகிறார்கள் அது உண்மை அல்ல

ம.பொ.சி. எனது போராட்டத்தில் பெரியாரைப் பற்றி பொய்யான செய்தியை எழுதினார். அதாவது பெரியார் சென்னை தமிழ் நாட்டில் இருந்தால் என்ன ஆந்திராவில் இருந்தால் என்ன திராவிடத்தில தானே இருக்கப் போகிறது என்று கூறினார் என்பது தான் அந்த செய்தி. திராவிடர் கழகத்தின் வரலாறு இன்று வரை முழுமையாக எழுதப்படவில்லை, தி.மு.க. வரலாறும் முழுமையாக எழுதப்படவில்லை எல்லைப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் 1953-1956 தி.மு.க.தேர்தலில் ஈடுபட வில்லை போராட்ட இயக்கமாகவே இருந்தது.

இந்த எல்லைப் பிரச்சினைக்கு காரணமே நேருதான்; அவர்தான் தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு எல்லைப் பகுதிகளை ஆந்திராவில், கேரளாவில் இணைத்தவர்.

சென்னை நகரம் ஆந்திராவுக்கும், தமிழ் நாட்டிற்கும் சில ஆண்டுகள் ஆந்திராவில் புதிய தலைநகரம் உருவாகும் வரை பொது தலைநகரமாக இருக்க வேண்டும் என்றும் கூறினார். அதை எதிர்த்து தான் தமிழகத்தில்

போராட்டங்கள் நடைபெற்றது. சென்னை தமிழகத்தின் தலைநகரமாக மட்டுமே இருக்க வேண்டும் என்று ம.பொ.சி. எந்தப் போராட்டத்தையும் நடத்தவில்லை. சென்னை மாநகராட்சியில் அவர் கொண்டு வந்த தீர்மானம் பற்றி மட்டுமே எழுதினார்.

நேரு அதை எல்லாம் மதிப்பதில்லை. சென்னை சட்டமன்றத்தில் 1955ஆம் ஆண்டு இறுதியில் நான்கு நாட்கள் விவாதம் நடைபெற்றது. மலையாள உறுப்பினர்கள் 15 பேர் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்திய பொது உடைமைக் கட்சியினர் தமிழ் நாட்டை சேர்ந்த 19 பேர் நடுநிலை வகித்தனர். என்ன தீர்மானம் தெரியுமா?. தேவிகுளம் பீர்மேடு தமிழ் நாட்டில் இணைக்க வேண்டும் என்ற சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நேரு மதிக்காமல், 1956 சனவரி மாதத்தில் நாடாளுமன்றத்தில் தேவிகுளம் பீர்மேடு கேரளாவுக்கு தான் சொந்தம் என்று நிறைவேற்றினார். தமிழகத்தின் உரிமையை வழங்க மறுத்து அதை ஏற்றுக் கொள்ள வலியுறுத்தினார். வேறு வழியில்லாமல் தமிழக சட்டமன்றத்தில் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் எதிர்த்துப் பேசக்கூடாது என்று காங்கிரஸ் கொரடா உத்தரவிட்டார். 1956 மார்ச் மாதம் தேவிகுளம் பீர்மேடு கேரளாவுக்கு தான் சொந்தம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டமன்றத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிய நேரு ம.பொ.சி யின் மாநகராட்சி தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு சென்னையை கொடுத்து விட்டார் என்பது எவ்வளவு பெரிய ஏமாற்று. தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 32 பேரும் ஒன்றாகச் சேர்ந்து தில்லிக்கு சென்று நேருவைச் சந்தித்து சென்னை தமிழ் நாட்டிற்கு மட்டுமே சொந்தம் என்று வற்புறுத்தி

சம்மதிக்க வைத்தனர். காங்கிரஸ் கட்சி இதில் உறுதியாக இருந்தது. 16-2-53 இல் அனைத்து கட்சிகளும் கலந்து கொண்ட மிகப்பெரிய கூட்டத்தை சென்னை கடற்கரையில் கூட்டி சென்னை தமிழ் நாட்டிற்கு மட்டுமே சொந்தம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில் கலந்துகொண்டு பேசிய பெரியார், தமிழ்நாட்டில் இதற்காக ஒரு நாள் கடையடைப்பும், வேலை நிறுத்தமும் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். காங்கிரஸ் கட்சியினரோ, காங்கிரஸ் கட்சியிலிருந்து ஓரங்கட்டப்பட்ட ம.பொ.சி.யோ நேருவை எதிர்த்து போராட தயாராக இல்லை. திராவிடர் கழகம் மட்டுமே 22-2-1953 அன்று தமிழகம் வந்த குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்துக்கு குத்தூசி குருசாமி தலைமையில் 5000 பேர் கருப்பு கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதேநாளில் தமிழகம் முழுவதும் தமிழர் உரிமை பாதுகாப்பு நாள் ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டங்கள் திராவிடர் கழகத்தினரால் நடத்தப்பட்டன. முதலமைச்சர் இராசாசி பெரியார் போராட்டங்கள் நடத்தத் தொடங்கிவிட்டார் இனி என்னால் தாக்கு பிடிக்க முடியாது; சென்னையைத் தமிழ் நாட்டிற்குத் தாருங்கள் அல்லது முதலமைச்சர் பதவிக்கு வேறு ஆளைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று தில்லி சென்று பிரதமராக இருந்த நேருவைச் சந்தித்து சொல்லி விட்டு வந்து விட்டார். அதன் பிறகு தான் நேரு 25-3-53இல் ஆந்திராவின் தலைநகர் ஆந்திர எல்லைக்குள் அமையும் என்று அறிவித்தார்.

‘சென்னை’ தலைநகரம் குறித்த பெரியாரின் பங்கை இப்போதும் மறுக்கிறீர்களா?.

## ஆந்திர பிரிவினை

ஆந்திரா பிரிவினை நேரத்தில் பெரியார் தெலுங்கர் என்பதால் தமிழ் நாட்டிற்கு ஆதரவாக இல்லை என்று பெரும்பாலான தமிழ்த் தேசியம் பேசும் தோழர்கள் கூறுகிறார்கள்.

அப்படி கூறுவதில் எந்த உண்மையும் இல்லை. 7-1-53 விடுதலை தலையங்கத்தில் ஆந்திரா பிரிவினையும் திராவிடர் கழகமும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.7-1-53 இலட்சுமிபுரம் கூட்டத்தில் பேசிய பெரியார் பொது கவர்னர், பொது அய்கோர்ட் கூடாது என்று கூறினர். ஆந்திரா மாநிலத்திற்கு சென்னை தற்காலிக தலைநகரமாகக் கூட இருக்கக் கூடாது என்று 11-1-53 இல் திராவிடர் கழக மத்திய செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியது. 14-1-53 இல் பச்சையப்பன் கல்லூரியில் மாணவர் மன்றத்தில் உரையாற்றிய பெரியார் மாநிலப் பிரிவினைக் கேட்பவர்கள் சுயநலம் கொண்டவர்கள்.பதவி ஆசை காரணமாக இதைக் கேட்கிறார்கள். என்னை பொறுத்தவரை மாநில பிரிவினையை விட நாட்டு பிரிவினையே முதன்மையானது என்பதை விளங்கிப் பேசினார்.

1-2-1953 இல் சென்னை கடற்கரையில் தமிழ் முஸ்லிம்கள் நடத்திய ‘சென்னை தமிழர்க்கே’ என்ற கூட்டத்தில் ஒரு இலட்சம் பேர் கலந்து கொண்ட மிகப்பெரிய கூட்டத்தில் சென்னை தமிழருடையதே. ஆந்திரர்களுக்கு சென்னையின் மீது எவ்வித உரிமையும் இல்லை என்று கூறினார். சென்னை நகருக்கு நஷ்ட ஈடாக ரூபாய் இரண்டு கோடியே முப்பது இலட்சம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை பெரியார் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று கூறினார். சென்னையை தனி கமிஷனர் மாநிலமாக மாற்ற வேண்டும்

என்ற ஆந்திரர்களின் கோரிக்கையை பெரியார் வன்மையாக கண்டிக்கிறேன் என்று கூறினார். (ஆதாரம் விடுதலை 2-2-53.) இராசாசி அப்போது முதலமைச்சர் ஆந்திர பிரிவினை மசோதாவை சென்னை சட்டமன்றத்தில் கொண்டு வந்தபோது. இரண்டு கோடியே முப்பது இலட்சம் ரூபாய்.ஆந்திரா அரசுக்கு கொடுக்க வேண்டும் என்று மசோதாவில் விதி உருவாக்கி இருந்தார். அதை தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர் அ.கோவிந்தசாமி வன்மையாக கண்டிக்கிறேன் என்று கூறினார்.மத்திய அரசு இந்த நிதியை கொடுக்க வேண்டும் என்று கூறினார். ஆனால் மேலவையில் பேசிய ம.பொ சி. நஷ்ட ஈடு என்று கேட்டால் கொடுக்கக் கூடாது சகோதர மாநிலம் உதவி என்று கேட்டால் கொடுக்கலாம் என்று பேசினார். தமிழ்நாட்டின் நன்மைக்கு எதிராகவும் ஆந்திரர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட இராசாசி உங்களுக்கு தமிழர்.தமிழர் நலனுக்காக தன் வாழ்நாள் முழுவதும் போராடி வந்த பெரியார் தமிழ் இனத்தின் பகைவரா.?

## திராவிடர்கள் இயக்கங்கள் தமிழ்த் தேசியத்திற்கு தடை கல்லா? படிக்கல்லா?

நான் பதிவு செய்து வந்திருக்கிற செய்திகள் பெ.மணியரசன் அவர்களுக்கு தெரியாது என்றோ, புதியவை என்றோ நான் நினைக்கவில்லை. இதனால் பெ.மணியரசன் மாற்றம் அடைந்து விடுவார் என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை. அவர் எல்லாம் தெரிந்துதான் செய்கிறார். நான் பதிவு செய்ய வில்லை என்றால் வரலாறு தெரியாத இளைஞர்களை அவர்கள் எளிதில் பெரியார் கொள்கைகளுக்கு எதிராக திருப்பி விடுவார்கள். உண்மையான தமிழக வரலாறும், திராவிடர் இயக்க வரலாறும் தமிழர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக தான் சிந்தனையாளன் இதழில் திராவிடர்கள் இயக்கங்கள் தமிழ்த் தேசியத்திற்கு தடை கல்லா? படிக்கல்லா? என்ற தலைப்பில் சான்றுகளோடு இதுவரை 38 கட்டுரைகள் தொடராக எழுதி வருகிறேன். இதுவரை 1925 முதல் 1938 இந்தி எதிர்ப்பு போராட்டம் வரைதான் எழுதி உள்ளேன். கட்டுரைகள் இன்னும் சில ஆண்டுகள் நீளும். கீற்று இணைய தளத்தில் சிந்தனையாளன் இதழ் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

வாய்ப்பு உள்ளவர்கள் படித்துக் கொள்ளலாம். பெரியார் தமிழ் இனத்தின் பகைவரா என்ற தலைப்பில் சான்றுகளோடு கீற்று இணைய தளத்தில் ஏழு கட்டுரைகள் எழுதி உள்ளேன் அதையும் படித்துக் கொள்ளலாம்.

பெரியாரின் பேச்சுக்களையும் எழுத்துக்களையும் முழுமையாக இதுவரை வே. ஆனைமுத்து அவர்களோ, கீ.வீரமணி அவர்களோ, கொளத்தூர் மணி அவர்களோ வெளியிட வில்லை. தி.மு.க.ஆட்சிக்கு வருவதற்கு முன்பு பலப்

போராட்டங்களை நடத்தியது. அவர்களுக்கு அதையெல்லாம் வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் இல்லை. இதனால் திராவிட இயக்கங்கள் நடத்திய போராட்டங்கள் இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. இதனால் புதியதாக தமிழ்த் தேசியம் பேசும் தோழர்கள் திராவிடர் இயக்கத்தை அழிப்பது தான் தன்னுடைய முதல் இலட்சியம் என்று பேசுவதும் எழுதுவதும் அதிகமாக உள்ளது. தி.க. தி.வி.க. ம.பெ.பொ.க. ஆகியவை தங்களின் எதிர்ப்பை பதிவு செய்து வந்திருக்கின்றன.

தி.மு.க. இதுவரை எந்தவொரு எதிர்ப்பையும் பதிவு செய்ய வில்லை. திராவிடர் இயக்கத்திற்கு இதனால் பின்னடைவு ஏற்படுகிறது. பெரியார் வேறு,தி.மு.க. வேறு என்று கருதாமல்.பொதுவாக திராவிடம் என்றாலே அது தமிழ் இனத்தின் எதிரி என்ற தன்மையில் குறை கூறுவது தவறு. பெரியார் ஒருவர் தான் 1956 முதல் 1973 வரை தமிழ் நாடு தமிழருக்கே என்று முழங்கியவர். ஒரு நாள், இரண்டு நாள், தமிழ் நாடு தமிழருக்கே என்று முழங்கியவர்களை புகழ்ந்து பேசுவதும், நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இதழ் நடத்திய மறைமலையடிகள் ஒரே நாளில் கூட தமிழ் நாடு தமிழருக்கே என்று எழுதவில்லை. ஆனால் அன்றாடம் விடுதலை இதழில் தமிழ் நாடு தமிழருக்கே என்று தலைப்பிட்டு எழுதினார் பெரியார்.பலப் பொதுக் கூட்டங்களில் தமிழ் நாடு தமிழருக்கே என்று முழங்கியவர் பெரியார். தமிழ் நாடு தமிழருக்கே என்று எழுதாத மறைமலையடிகளை தமிழ்த் தேசியத்தின் தலைவராக ஏற்றுக் கொண்ட நீங்கள் பெரியாரை தமிழ் இனத்தின் பகைவர் என்று கூறிவருவது சரியா? தவறா?

## சிலப்பதிகாரம், தொல்காப்பியம் – பாவேந்தர் பார்வை

நானே பதில் சொல்வதை விட பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் விடைகளையே இவர்களுக்கு பதிலாக அளிக்க உள்ளேன்.

கேள்வி: சிலப்பதிகாரம் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது; ஆரியத்தை தமிழரிடம் புகுத்தும் நோக்கமுடையது என்று பெரியார் சொல்லலாமா?

பாரதிதாசன் பதில்: கதையமைப்பு நன்று. தமிழர் வாழ்க்கை முறை சில நல்லன.
பகுத்தறிவுக்கு ஒவ்வாதவையாய் இருக்கின்றன.

பாடம் சொல்லும் புலவர்கள் இவைகளை மாணவர்களுக்கு எடுத்து விளக்குவதில்லை.அதனால் ஆரியம் தமிழகத்தில் வலியுறுகின்றது.

தமிழர் ஒழுக்கம், கலை,நாகரிகம்,பண்பாடுகள் குறைவு படுத்தப் படுகிறன. புதியதொரு சிலப்பதிகாரம் எழுதிக்கொள்ளலாமன்றோ!

கேள்வி: தொல்காப்பியம் ஒரு தமிழனால் செய்யப்படவில்லை. தமிழர் ஒழுக்கம், கலை, நாகரிகம், அதில் மறுக்கப்படுகின்றன என்று கூறலாமா பெரியார்?

பாரதிதாசன் பதில்: ஆயிரம் முறை கூறலாம். வெள்ளை வாரணனாரும் பிறரும், தொல்காப்பியத்தில் பார்ப்பனரைப் பற்றிய செய்யுட்களை இடைச் செருகல் செய்துள்ளார்கள் என்று கூறினார்கள்.

இடைச் செருகல்களை நீக்கிப் பதிப்பிக்கலாமன்றோ புலவர்கள்!

செய்யட்டும் செய்த பிறகு பெரியார் அவ்வாறு கூற மாட்டார். பாரதிதாசன்(குயில் 16-2-1960)

பாரதிதாசனை புகழ்ந்து கொண்டும் பெரியாரை இகழ்ந்தும் பேசிவருகின்ற தமிழ்த் தேசியம் பேசும் தோழர்களுக்கு பாரதிதாசன் விடைகளையே பதிலாக அளித்து உள்ளேன்.

பாரதிதாசன் பதில்கள் தொடரும்.

## தமிழரசர்கள் முட்டாள்கள்; காட்டு மிராண்டிகள் என்று பெரியார் சொல்லலாமா? – பாவேந்தர் பதிலடி

பெரியாரைப் பற்றி தமிழ்த் தேசியம் பேசும் தோழர்களின் கேள்விகளுக்கு பாரதிதாசன் பதில் சொல்லி இருக்கிறார்.நேற்றைய தொடர்ச்சி.

கேள்வி: தமிழரசர்கள் முட்டாள்கள்; காட்டு மிராண்டிகள் என்று பெரியார் சொல்லலாமா?

பாரதிதாசனின் பதில்: ஏன் சொல்லக் கூடாது? தெருவில் கிடக்கும் நாய் விட்டையில் சிவனைக் கண்டான். கண்டவன் சும்மாவா இருந்தான். கோயில் கட்டி அதில் நிறுவி கும்பிடவும் வைத்தான். இப்படி ஒரு தமிழரசன். வடநாட்டானின்று ஆரியப் பார்ப்பனர்களை அழைத்துத் தமிழர் மேல் ஏறிச் சவாரி செய்யச் சொல்லுகிறான். இப்படி ஒரு தமிழரசன்! இப்படி பட்டவர்கள் எல்லாம் பிற்கால மன்னர் தாமே அதற்கு முற்காலத்தில் இருந்தவர்கள் நாகரிகம் உள்ளவர்களா என்று கூறலாம். நாகரிகம் உள்ளவர்கள், நாகரிகம் இல்லாதவர்கள் ஆகிய இருவகையாரில் வெற்றி பெற்றவர் எவர்? நாகரிகம் இல்லாதவரல்லவா?

அவர் கட்டிய கோயில்,அவர் காட்டிய நாய் விட்டைகள் தாமே இன்று ஆட்சி நடத்துகின்றன?

தமிழகத்தில் பற்றுள்ள புலவர்கள், நாகரிகம் இல்லாதவர் கண்ட கோயில் நாய் விட்டைகளை ஒதுக்கியும், நாகரிகம் கொண்டிருந்த மன்னரின் நாட்டுத் தொண்டைப் போற்றியும் நூற்கள் செய்ததுண்டா? செய்ய வேண்டுமல்லவா!

அவ்வாறு அவர்களைச் செய்யத் தூண்டுவதுதான் பெரியாரின் பேச்சு! பாரதிதாசன் (குயில் 23-2-1960)

இவற்றை ஏற்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா?

## தமிழுக்கு இலக்கியம் இல்லை என்னலாமா?

பெரியார் தமிழ் இனத்தின் பகைவர் என்று கூறிவருகிறவர்களுக்கு பாரதிதாசன் கூறிய பதில்களை கடந்த இரண்டு நாட்களாக பதிவு செய்து இருந்தேன். இன்றும் பாரதிதாசன் பதில்களையே பெரியார் தமிழ் மொழியின் பகைவர் என்று கூறுபவர்களுக்கு விடையாக அளிக்க உள்ளேன்.

கேள்வி: தமிழுக்கு இலக்கியம் இல்லை என்னலாமா பெரியார்?

பாரதிதாசன் பதில்: இராமாயணத்தையும்,பாரதத்தையும் ஆரியரின் காட்டு மிராண்டித் தனத்தைப் பின்பற்றி எழுந்த புராணம் முதலியவற்றையும் நம் இலக்கியம் நம் இலக்கியம் என்று கூறுவதன்றித் தமிழர் இலக்கியங்கள் இன்னின்னவை என்று எடுத்துக் காட்டும் வலி இருந்ததா புலவர்களிடம்? அமைச்சர்களிடம்? தமிழிலக்கியத்தை முன்னுக்குக் கொண்டு வாருங்கள், அவைகளைப் பின்பற்றி இலக்கியத்தை குவியுங்கள். சீர்திருத்தக்காரர்களை எதிர்ப்பதன் மூலம் வயிறு வளர்க்க எண்ணாதீர்கள் என்பது தான் பெரியார் சொல்வதன் பொருள். பாரதிதாசன் (குயில் 23-2-1960)

பெரியாரை தமிழ் மொழியின் பகைவர் என்று கூறிவரும் பெ.மணியரசன் பாரதிதாசன் பதில்களையாவது ஏற்றுக் கொள்வாரா?.

## செங்கோலில் ஈ.வெ.ரா.வின் அறிவியக்கம் கட்டுரை

5-4-2016

அவர் சொன்னது உண்மைதான் என்பதற்கு ஒரு செய்தியை மட்டும் இங்கு எடுத்துக் காட்டுகிறேன்.

1965 இல் ஈ.வி.கே.சம்பத் நடத்திய தமிழ்ச் செய்தி ஏட்டில் பொங்கல் மலரில் பெரியாரின் கட்டுரை ஒன்று இடம்பெற்றது.

"தமிழ் ஒரு நியூசென்ஸ், தமிழ்ப் புலவர்கள் சமூகத் துரோகிகள்" என்பது தான் அக்கட்டுரையின் தலைப்பு. அக்கட்டுரை 16-1-1965இல் விடுதலை இதழில் இடம்பெற்றது.

ம.பொ.சி.யின் செங்கோல் இதழில் 7-2-1965 இல் இடம்பெற்றது. அக்கட்டுரையில் பெரியார் என்ன எழுதி இருந்தார் என்பதை யாரும் சொல்லவில்லை ஆனால் தலைப்பை பார்த்ததும் பெரியார் தமிழ் மொழியின் பகைவர் என்று கூறிவருகின்றனர் பெரும்பாலான தமிழ்த் தேசிய வாதிகள். பழமையை பாதுகாக்கிறார்கள் இந்தப் புலவர்கள் என்பதற்கு ரோஷப்பட்டு, எந்தப் புலவராவது திருந்தி கந்தப் புராணத்திற்கு மறுப்பு, இராமாயணம், பாரதத்திற்கு மறுப்பு மற்றும் இலக்கியங்களுக்கு மறுப்பு அல்லது ஆராய்ச்சி நூல் என்னும் பெயரில் பகுத்தறிவாளர்கள் ஏற்கும்படி 100-200 பக்கங்களில் அடங்கும் புத்தகங்கள் எழுதி தருவார்களேயானால் வரவேற்பதோடு சன்மானங்களும் தந்து பாராட்டு விழாக்களும் நடத்தப்படும்.

இப்போதைய புலவர்கள் பலரின் நடத்தை எனக்கு வேதனை அளிக்கிறது. தமிழ் மக்களின் நலத்தை முன்னிட்டே இதை எழுத நேர்ந்தது.

பெரியார் தமிழர்களைப் பகுத்தறிவாளர்களாக மாற்றுவதற்கு இலக்கியங்கள் பயன்பட வேண்டும் என்று விரும்பினார். இது எப்படி தமிழ் மொழிக்கு எதிரானது ஆகும்.

இதற்கு மறுப்பு தெரிவித்து 'செங்கோல்' இதழில் 14-2-1965 இல் திருத்தணி ரஷித் "ஈ.வெ.ரா.வின் அறிவியக்கம்"என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். அதில் தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என்று சொல்லி கொடுத்தவரே ஈ.வெ.ரா.தான்...இந்தியின் வரவால் தமிழ் அழியும் என்ற பொய்யான வாதத்தை தமிழ் மக்களுக்கு ஊட்டியவரே ஈ.வெ.ரா.தான். 1938 இல் தொடங்கிய இந்த அருந்தொண்டை 1965 வரை தொடர்ந்து செய்து வருகிறார். தமிழ் மக்களுக்கு தமிழ் வெறி முன் எந்த காலத்திலும் இல்லை. கூட்டம் போட்டு,மாநாடு கூட்டி ஊர்வலம் நடத்தி தமிழ் வெறியை வெளிப்படுத்தியதே இல்லை. தமிழ் வெறியை வெளிப்படுத்தியது 1938 இல் ஈ.வெ.ரா. தலைமைதான்.

பெரியார் தமிழ் மொழிக்கு எதிரானவர் என்று ஒரு கூட்டம் கூறுகிறது. தமிழ் மொழி வெறியைத் தமிழ் மக்களுக்கு ஊட்டியவரே பெரியார்தான் என ம.பொ.சி.யின் செங்கோல் இதழில் ரஷித் எழுதி உள்ளார். பெரியார் தமிழ் மொழிக்கு எதிரானவர் இல்லை என்று இப்போதாவது பெ.மணியரசன் உணர்வாரா?.

## இடஒதுக்கீடு

பெ.மணியரசன் பெரியாரைப் பற்றி புதிய புதிய கேள்விகளை கேட்டு வருகிறார்.அவருடைய அண்மைக் கால கேள்விகளை ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்து உள்ளார்.

பெரியார் இல்லாத கேரளாவில், ஆந்திராவில், கர்நாடகாவில் இடஒதுக்கீடு இல்லையா என்கிறார்.

அந்த மாநிலங்களின் சில பகுதிகள் ஒன்றாக இணைந்து இருந்தது தான் சென்னை மாகாணம் என்பதை மறந்து விட்டு பேசுகிறார்.

1956 இல் மொழிவழி மாநிலங்கள் பிரிந்த பிறகு அவை தனி மாநிலங்கள் ஆயின. நீதிக்கட்சி ஆட்சி காலத்தில் 1921 முதல் இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்ற தீர்மானங்கள் சட்டமன்றத்தில் பல முறை நிறைவேற்றப்பட்டன. 1924 இல் பணியாளர் தேர்வு வாரியம் உருவாக்கி இடஒதுக்கீடு நடைமுறைப் படுத்தப் பட்டு வந்தது.

அது தான் இன்று தமிழ் நாடு அரசு தேர்வாணையமாக உள்ளது. மைசூரை ஆண்ட மன்னர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். உடையார் சாதியைச் சேர்ந்தவர்கள். 1920 இல் நான்காம் கிருஷ்ணராஜ உடையார், மில்லர் என்ற நீதிபதி தலைமையில் குழு அமைத்து இடஒதுக்கீட்டை நடைமுறை படுத்தி வந்தார். 1930இல் சென்னை சட்டமன்றத்தில் தேவதாசி முறையை ஒழிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.அடுத்த வாரமே திருவாங்கூர் சமஸ்தானம் தேவதாசி முறையை ஒழித்துக் கட்டியது. வடஇந்தியாவில் 1978 இல் வே.ஆனைமுத்து சென்று போராட்டம்

நடத்தினார் அதன் பிறகு தானே முதலில் பீகாரில் 1979 இல் இடஒதுக்கீடு வந்தது.வேறு எந்த மாநிலத்திலாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு இடஒதுக்கீடு இருந்ததா. மணியரசன் அவர்களால் காட்டமுடியுமா?.

மணியரசனின் அடுத்த கண்டுபிடிப்பு.

இடஒதுக்கீட்டை கண்டு பிடித்தவர்கள் பெரியாரோ, நீதிக்கட்சியினரோ இல்லை.

கோல்காபூர் மன்னர் சாகு சத்திரபதி தான் 1902 இல் இடஒதுக்கீட்டை நடைமுறை படுத்தி வந்தார் என்கிறார். நாங்கள் யாரும் இல்லை என்று மறுக்க வில்லையே.

அவர் பூலே வழியில் வந்தவர். அவர் தான் இடஒதுக்கீட்டை நடைமுறை படுத்திவந்தார் என்பதை பல ஆண்டுகளுக்கு முன்பே சிந்தனையாளன் ஏட்டில் எழுதி உள்ளோம். கு.வெ.கி.ஆசான் சாகு சத்திரபதியை பற்றி ஒரு நூல் எழுதி உள்ளார். பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் அந்த நூலை வெளியிட்டு உள்ளது.

மராட்டியத்திலும் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் 1840 முதல் பூலே அவர்களின் வழி காட்டுதல்படி இயங்கி வந்தது.

முதல் அனைத்திந்திய பார்ப்பனர் அல்லாதார் மாநாடு 1917 இல் நடைபெற்றது அம் மாநாட்டிற்கு சாகு சத்திரபதி தான் தலைவராக இருந்தார். சென்னை மாகாண பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்திற்கும்,மராட்டிய மாநில பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்திற்கும் இருந்த உறவுகள் என்ற தலைப்பில் சிந்தனையாளன் ஏட்டில் நான் பல ஆண்டுகளுக்கு முன்பே கட்டுரை எழுதி

உள்ளேன்.

பெரியாருக்கோ, நீதிக்கட்சிக்கோ எந்தப் பெருமையும் வந்து விடக்கூடாது என்று மணியரசன் ஆய்வுகளை மேற்கொண்டு வருவது ஏன்?.

இப்போது உள்ள மதவாத அரசியல் சூழலில் மதவாதிகளை வெளிப்படையாக கண்டித்து இயக்கம் நடத்திய பெரியாரை தமிழ் மக்களின் எதிரியாக காட்டுவது ஏன்?

தமிழ்த் தேசியம் அமைக்க போராடி வருவதாக கூறும் நீங்கள்.காலம் முழுவதும் இந்திய தேசியத்தை கண்டித்து,சுதந்திரா தமிழ் நாடு அடைவதே என் இறுதி இலட்சியம் என்று போராடிய பெரியாரை தமிழ் இனத்தின் பகைவராக எழுதுவது ஏன்?

வடஇந்தியாவில்,மற்ற மாநிலங்களில் பொது உடைமை கட்சியினர் கூட சாதி அடையாளத்தோடு இருந்து உள்ளனர். நம்பூதிரிபாட், ஈ.கே.நாயனார், அச்சுத மேனன், ஜோதிபாசு, புத்ததேவ் பட்டாச்சார்யா, அரி கிஷன் சிங் சுர்ஜித். என்று இருக்கும் போது தமிழ் நாட்டில் மட்டும் சாதி அடையாளத்தோடு இல்லாமல் இருப்பது யாரால் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தினால் அல்லவா?

நேற்று வைகோ கலைஞரை மறைமுகமாக சாதியை சொல்லி இழிவுபடுத்தி பேசியதை ஒரே நாளில் மன்னிப்பு கேட்க வைத்தது யார்? இது பெரியார் மண் என்பதற்கு அடையாளம் இல்லையா?1

## சட்டத்திருத்தம்

மணியரசன் அவர்கள் பெரியாருக்கு எந்தப் பெருமையும் வந்து விடக்கூடாது என்பதற்காக சில ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

அத்தகைய ஆய்வுகளில் ஒன்று

வகுப்புரிமை ஆணை செல்லாது என உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் தீர்ப்பு அளித்த போது 1950-51களில் பெரியார் தலைமை் மிகப்பெரிய மாநாடுகள்,கண்டன ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள் நடத்தியும், சென்னைக்கு வந்த மத்திய அமைச்சர்கள் அனைவருக்கும் கறுப்புக் காட்டியும் எதிர்ப்பு தெரிவித்தனர்

அதன் விளைவாக தான் இந்திய அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம் கொண்டு வந்தார் நேரு என்ற வரலாற்றை திராவிடர் இயக்கத்தை சேர்ந்த அனைவரும் அறிந்ததே.

ஆனால் பெ.மணியரசன் எழுதுகிறார் அந்த ஒரு திருத்தம் மட்டுமா? அன்று கொண்டு வரப்பட்டது. நான்கு,அய்ந்து திருத்தங்கள் ஒன்றாக சேர்த்து தானே கொண்டு வரப்பட்டது என்று எழுதுகிறார்.

பார்ப்பன மாணவர்கள் மட்டுமே உயர்கல்வி நிறுவனங்களில் ஆக்கிரமித்து கொள்கிறார்கள்.

அனைத்து வகுப்புகளுக்கும் உயர்கல்வி நிறுவனங்களில் இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக 1922 இல் நீதிக்கட்சியின் ஆட்சியில் கல்லூரி மாணவர்கள் சேர்க்கை குழு அமைத்து 50% இடங்கள்

பார்ப்பனர்களுக்கும் மீதமுள்ள 50% இடங்கள் பார்ப்பனரல்லாத மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளதன் அடிப்படையில் இக்குழுவில் கல்லூரி முதல்வர்,அத்துறை செயலாளர், நீதிக்கட்சியை சார்ந்த அறிஞர் ஒருவர் நியமனம் செய்யப் பட்டனர்.

1922 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியின் மாணவர்கள் சேர்க்கை குழுவில். நீதிக்கட்சியை சார்ந்த டாக்டர் சி.நடேசனார் இடம்பெற்றிருந்தார். மாநில கல்லூரியில் 1922 ஆம் ஆண்டு மொத்தம் 242 மாணவர்கள் மட்டுமே படிக்க முடியும். பார்ப்பன மாணவர்கள் 167 பேர் விண்ணப்பம் செய்து இருந்தனர். 242 இல் 50% என்ற கணக்கின் படி 121 பார்ப்பன மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மீதமுள்ள 46 பார்ப்பன மாணவர்களுக்கு இடம் மறுக்கப்பட்டு,பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

மெயில் ஏடு 12-8-1922 இல் இச்செய்தியை வெளியிட்டு உள்ளது. கடந்த காலங்களில் தமிழக வரலாற்றில் என்றுமே இல்லாத சமூக புரட்சி இது. அதேபோல மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சேர்க்கை குழுவில் ஏ.ஆர்.இராமசாமி இடம்பெற்றிருந்தார்.

1921 இல் மருத்துவக் கல்லூரி சேர்ந்த மாணவர்கள் விவரம்

பார்ப்பனர் 58

பார்ப்பனரல்லாத இந்துக்கள். 15

கிறிஸ்தவர்கள். 9

ஆங்கிலோ இந்தியர் 6

மொத்தம். 88

கல்லூரி மாணவர்கள் சேர்க்கை குழு ஏற்படுத்தப்பட்டபிறகு இதில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டது.

1922 இல் மருத்துவக் கல்லூரி சேர்ந்த மாணவர்கள் விவரம்

பார்ப்பனர். 33

பார்ப்பனரல்லாத இந்துக்கள். 36

கிறிஸ்தவர்கள். 15

இசுலாமியர்கள். 5

ஆங்கிலோ இந்தியர். 2

மொத்தம். 91

பார்ப்பனர் அல்லாத மாணவர்கள் எண்ணிக்கை ஒரே ஆண்டில் 15 இல் இருந்து 36 ஆக உயர்வு பெற்று உள்ளனர். பார்ப்பன மாணவர்கள் எண்ணிக்கை 58 இல் இருந்து 33 ஆக குறைந்தது. இது நீதிக்கட்சி ஆட்சியின்

போது நிகழ்ந்த சமூக புரட்சி ஆகும். இது சட்டமன்றத்தில் கொடுக்கப் பட்ட புள்ளி விவரங்கள் ஆகும்.

இந்த கல்லூரி மாணவர்கள் சேர்க்கை குழு நீதிக்கட்சி ஆட்சியின் காலம் முழுவதும் இருந்தது. 1937-38ல் இராசாசியின் ஆட்சியில் இக்குழு கலைக்கப்பட்டது. மீண்டும் 1947 இல் ஓமந்தூர் இராமசாமி ஆட்சியில் இக்குழு உருவாக்கப்பட்டது. அத்துடன் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு தனி இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்ற பெரியாரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு தனி இடஒதுக்கீட்டை ஓமந்தூர் இராமசாமி அளித்தார். இந்த அரசாணை செல்லாது என உயர்நீதிமன்றமும்,உச்சநீதிமன்றமும் தீர்ப்புகள் வழங்கினர்.

இதை பெரியார் ஒராண்டு முழுவதும் போராடினார். மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்று வழக்கு தொடுத்த பார்ப்பனப் பெண் செண்பகம் என்பவருக்கு அப்போது 42 வயது திருமணமாககி இரண்டு குழந்தைகளும் இருந்தது.அவர் படிக்கும் போது பணவசதி இல்லை இப்போது தான் வசதி வந்தது மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும் என்று விண்ணப்பம் போட்டேன். நான் பார்ப்பனர் என்பதால், இந்த வகுப்புரிமை ஆணை காரணமாக எனக்கு இடம் கிடைக்க வில்லை என்று வழக்கு தொடுத்தார். அரசியல் சட்டத்தின் வரைவின் போது அதில் உறுப்பினராக இருந்த அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் இந்த பெண்ணுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் வாதாடினார்.

பெரியாரின் போராட்டம் காரணமாகவே அன்றைய காங்கிரஸ் அரசு உச்சநீதிமன்றம் வரை வகுப்புரிமை ஆணைக்கு ஆதரவாக மேல் முறையீடு செய்யதது. இறுதியில் உச்சநீதிமன்றமும் அந்தப் பெண்ணுக்கு இடமளிக்க தீர்ப்பளித்து. சட்டமன்றத்தில் இது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த டி.எஸ்.எஸ்.ராஜன் பார்ப்பன சுகாதார அமைச்சர். அந்தப் பெண் மருத்துவக் கல்லூரியில் சேர விண்ணப்பிக்கவே இல்லை என்று சட்டமன்றத்தில் அறிவித்தார்.

பார்ப்பனர்கள் எவ்வளவு தில்லுமுல்லு பேர்வழிகள் என்பதை இதன் மூலம் உணரலாம். அன்று சென்னை மாகாணம் தவிர வேறு எந்த மாகாணத்திலும் இடஒதுக்கீடு இல்லாத காரணத்தால் வேறு எங்கும் போராட்டம் நடைபெற வில்லை. நேருவே இதை முன்மொழியும் போது தமிழ் நாட்டில் ஏற்பட்ட சில அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்த திருத்தத்தை முன்மொழிகிறேன் என்று நாடாளுமன்றத்தில் உரையாற்றித் தான் திருத்தத்தை முன்மொழிகிறேன் என்று கூறினார். இதில் மணியரசன் அவர்களுக்கு எங்கு வலிக்கிறது என்று தெரியவில்லை. பெரியாரின் சாதனைகளைக் கூட மறுப்பது சரியா?